பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 07 2024 **MONDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. பொருளாதார ஆய்வறிக்கையை நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார்.

2. நிபா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள கேரள மாநில அரசுக்கு உதவுவதற்காக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சிலின் 6 பேர் கொண்ட நிபுணர் குழு கோழிக்கோடு சென்றடைந்துள்ளது..

3. வன்முறை காரணமாக, பங்களாதேஷிலிருந்து இந்திய மாணவர்கள் 4 ஆயிரத்து 500 பேர் பாதுகாப்பாக தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

4. அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அதிபர் தேர்தல் போட்டியிலிருந்து தற்போதைய அதிபர் ஜோ பைடன் விலகியுள்ளார்.

5. ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் இலங்கை – மலேசியாவையும், பங்களாதேஷ் - தாய்லாந்தையும் எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், பொருளாதார ஆய்வறிக்கையை இன்று சமர்ப்பிக்கிறார்.

நாட்டின் பல்வேறு துறைகளில் காணப்படும் வளர்ச்சி, ஒட்டுமாத்த உள்நாட்டு வளர்ச்சி, பணவீக்கத்தின் தாக்கம், வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல முக்கியமான தகவல்கள் அதில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகில் அதிவேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக இந்தியப் பொருளாதாரம் உள்ளது.

இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி, நடப்பாண்டு 6 புள்ளி எட்டு சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக அதிகரிக்கும் என்று சர்வதேச செலாவணி நிதியம் சமீபத்தில் தெரிவித்தது.

இந்நிலையில் மக்களவையில் நாளை, நிதியமைச்சர் 2024-25ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மூன்றாவது முறையாக பதவியேற்ற பின்னர் தாக்கல் செய்யப்படும் முதல் பட்ஜெட் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டத்தொடரில் பேரிடர் மேலாண்மை திருத்த மசோதா, கொதிகலன்கள் மசோதா, காஃபி வாரிய மேம்பாடு மற்றும் வளர்ச்சி மசோதா, ரப்பர் மேம்பாட்டு மசோதா உட்பட 6 மசோதாக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

இந்த கூட்டத்தொடர் அடுத்த மாதம் 12ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

முன்னதாக நேற்று, நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரை சுமுகமாக நடத்துவது குறித்து, அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தொடரை சுமுகமாக நடத்தி முடிக்க, அனைத்து கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் நீட் தேர்வு விவகாரம், ரயில் பாதுகாப்பு, அக்னிபாத் திட்டம், மத்திய-மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள், மணிப்பூர் மற்றும் ஜம்மு காஷ்மீரில் நிலவும் பாதுகாப்பு

சூழ்நிலை குறித்தும் விவாதிக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

>>>>><<<<<

ஆர்எஸ்எஸ் அமைப்பின் நடவடிக்கைகளில் அரசு ஊழியர்கள் ஈடுபடுவதற்கான தடையை மத்திய அரசு நீக்கியுள்ளது.

1966ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியின் போது இதற்கான தடை விதிக்கப்பட்டது.

தற்போது இந்த தடையை, மத்தியப் பணியாளர் நல அமைச்சகம் நீக்கியுள்ளது.

மத்திய அரசின் இந்த முடிவை பிஜேபி வரவேற்றுள்ளது.

58 ஆண்டுகளுக்கு முன்பு விதிக்கப்பட்ட இந்த தடை, அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. அமித் மால்வியா தெரிவித்தார்.

ஆர்எஸ்எஸ் அமைப்பின் செயல்பாடுகளில் அரசு ஊழியர்கள் கலந்து கொள்ள விதிக்கப்பட்ட தடையை ஏற்கனவே ஹரியானா, ஹிமாச்சலப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், சத்திஷ்கர் உள்ளிட்ட மாநில அரசுகள் நீக்கியுள்ளன.

>>>>><<<<<

நிபா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள கேரள மாநில அரசுக்கு உதவுவதற்காக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சிலின் 6 பேர் கொண்ட நிபுணர் குழு கோழிக்கோடு சென்றடைந்துள்ளது.

நிபா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை அவர்களுக்கு எங்கிருந்து இந்த நோய் பரவியது உள்ளிட்ட விவரங்களை சேகரிக்கவும், தொழில்நுட்ப ரீதியாக உதவிகளை வழங்கவும் இந்தக் குழுவை மத்திய சுகாதார அமைச்சகம் அனுப்பி வைத்துள்ளது.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை பரிசோதிப்பதற்காக நடமாடும் ஆய்வகத்தையும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் கோழிக்கோடு அனுப்பியுள்ளது.

நிபா வைரஸால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கு பரிசோதனைகளை நடத்தவும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் திட்டமிட்டுள்ளது.

>>>>><<<<<

வன்முறை காரணமாக, பங்களாதேஷிலிருந்து இந்திய மாணவர்கள் 4 ஆயிரத்து 500 பேர் பாதுகாப்பாக தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்களை, இந்திய எல்லை வரை பத்திரமாக அழைத்து வர வெளியுறவுத்துறை அமைச்சகமும், டாக்காவில் உள்ள இந்திய தூதரக அலுவலகமும் ஏற்பாடுகள் செய்திருந்தன.

இந்திய மாணவர்களுடன் நேபாளம், பூட்டான் மற்றும் மாலத்தீவு நாடுகளைச் சேர்ந்த மாணவர்களும் பத்திரமாக இந்தியா வந்துள்ளனர்.

இந்நிலையில், பங்களாதேஷில் உயர்கல்விக்காக சென்ற தமிழக மாணவர்கள் 49 பேர் நேற்றிரவு சென்னை வந்தடைந்தனர்.

அவர்களை விமான நிலையத்தில் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் வரவேற்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், பங்களாதேஷ் எல்லையிலிருந்து பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டு, கொல்கத்தா, குவஹாத்தி மற்றும் அகர்தலா விமான நிலையங்களிலிருந்து இவர்கள் சென்னை அழைத்து வரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அடுத்த கட்டமாக, மேலும் சில மாணவர்கள் சென்னைக்கு அழைத்து வரப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

>>>>><<<<<

பீகார் சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

ஐந்து நாட்கள் நடைபெறவுள்ள இந்த குறுகியகால கூட்டத்தொடரில் நடப்பு நிதியாண்டிற்கான கூடுதல் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படவுள்ளது.

முன்னதாக, ரூபாலி சட்டப்பேரவை தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற சுயேச்சை வேட்பாளர் திரு. சங்கர் சிங்-கிற்கு, இன்று சட்டப்பேரவை தலைவர் திரு. நந்து கிஷோர் யாதவ் பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

>>>>><<<<<

தமிழகத்தில் முதல்முறையாக கட்டிட அனுமதியை ஆன்லைன் மூலம், உடனடியாக வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் இத்திட்டத்தை அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

ஆன்லைன் மூலம் விண்ணப்பதாரர் அளிக்கும் விவரங்களின் அடிப்படையில் உடனடியாக கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி வழங்கப்படும் என்றும், இதற்காக விண்ணப்பதாரர் எந்த அலுவலகத்திற்கும் செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

கட்டிடப் பணி நிறைவடைந்ததும், 'முடிவுச் சான்று' பெறவேண்டியதிலிருந்து, விலக்கு அளிக்கப்படுவதாகவும் அரசு கூறியுள்ளது.

2 ஆயிரத்து 500 சதுர அடி வரையுள்ள மனையில், 3 ஆயிரத்து 500 சதுர அடியில் கட்டப்படவுள்ள வீடுகளுக்கு இது பொருந்தும் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு இன்று தொடங்குகிறது.

இந்த ஆண்டு, மாநிலம் முழுவதும் பொறியியல் படிப்புக்கு 2 லட்சத்து 53 ஆயிரத்து 954 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதில், 2 லட்சத்து 9 ஆயிரத்து 645 பேர் மட்டுமே பதிவுக்கட்டணம் செலுத்தியுள்ளனர்.

சான்றிதழ் சரிபார்ப்புக்குப் பின்னர், ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 868 மாணவர்கள் கலந்தாய்வில் பங்கேற்க தகுதி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பத்தாம் தேதி தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்ட நிலையில், நடப்பு கல்வியாண்டில் 2 லட்சத்து 32 ஆயிரத்து 376 இடங்களுக்கு மாணவர்களை சேர்க்க அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் கவுன்சில் அனுமதி அளித்துள்ளது.

அண்ணா பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் இளநிலை பொறியியல் மற்றும் இளநிலை தொழில்நுட்ப படிப்புகளுக்கான கலந்தாய்வு, இன்று தொடங்குகிறது.

இதனைத் தொடர்ந்து, ஏழரை சதவீத இடஒதுக்கீட்டில், பொறியியல் கல்லூரிகளில் சேரவுள்ள அரசு பள்ளி மாணவர்களுக்கான கலந்தாய்வு நடைபெறும்.

சிறப்பு இடஒதுக்கீட்டு பிரிவினருக்கான கலந்தாய்வு, இம்மாதம் 25-ஆம் தேதி முதல் 28-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அதிபர் தேர்தல் போட்டியிலிருந்து தற்போதைய அதிபர். ஜோ பைடன் விலகியுள்ளார்.

நேற்றிரவு சமூகவலைதளத்தில் இந்த தகவலை அவர் பதிவு செய்துள்ளார்.

இதையடுத்து, அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளராக தற்போதைய துணை அதிபர் திருமதி. கமலா ஹாரிஸ் நிறுத்தப்படலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் முன்னாள் அதிபரும், குடியரசு கட்சியின் அதிபர் பதவிக்கான வேட்பாளருமான திரு. டொனால்டு டம்ரம்ப்புடனான விவாத நிகழ்ச்சியின் போது, பல்வேறு கேள்விகளுக்கு திரு. ஜோ பைடன் பதிலளிக்க தடுமாறினார்.

இதன் காரணமாக, ஜனநாயக கட்சியின் வேட்பாளராக மீண்டும் திரு. ஜோ பைடனை நிறுத்த சில தலைவர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

>>>>><<<<<

சத்திஷ்கர், மேற்கு உத்தரபிரதேசம் மற்றும் மகாராஷ்ட்ராவின் விதர்பா பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளா, மாஹே, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் இன்று பலத்த மழை பெய்யும் என்றும் பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், மேற்கு ராஜஸ்தான், நாகாலாந்து, மணிப்பூர், மிஸோராம் ஆகிய மாநிலங்களில் நாளை பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கனமழை காரணமாக, நீலகிரி மாவட்டத்தில் உதகை, குந்தா, குன்னூர், கோத்தகிரி தாலுகாக்களில் உள்ள பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நீலகிரி மாவட்டத்தின் பல இடங்களில் சூறைக்காற்று மற்றும் கனமழை காரணமாக, சாலைகளில் விழுந்துள்ள மரங்களை அகற்றும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

>>>>><<<<<

ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் இலங்கை – மலேசியாவையும், பங்களாதேஷ் - தாய்லாந்தையும் எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திருப்பூர் அணி 51 ரன் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

மற்றொரு போட்டியில், திண்டுக்கல் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் கோவை அணியை வென்றது.

>>>>><<<<<

கோவில்பட்டியில் நடைபெற்ற தென்மண்டல ஹாக்கி போட்டியில் திருநெல்வேலி அணி கோப்பையை வென்றது.

>>>>>END<<<<<